கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

அ.வ.எண்.736/2010          பி.வா.சா.2 நாச்சிமுத்து

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 01.11.2025

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) வழக்குச் சொத்தின் காலை எண் எனக்குத் தெரியும் என்றால் சரிதான். அது 247/1 ஆகும். வழக்குச் சொத்தின் பரப்பளவும், அளவுகளும் தெரியுமா என்றால் பரப்பளவு 50 செண்ட் ஆகும். தென்வடல் இருபுறமும் 30 மீட்டர் ஆகும். கிழமேல் இருபுறமும் சுமார் 67 மீட்டர் இருக்கும். வழக்குச் சொத்தின் அளவுகள் காட்டும் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வழக்குச் சொத்தில் சுற்றுச்சுவர் உள்ளது என்றால் சரிதான். மேற்படி சுற்றுச்சுவரின் நீளம் என்ன என்றால் சுமார் 250 முதல் 300 மீட்டர் இருக்கும்.

2) வாதிகள் அ.வ.எண்.417/2010 என மற்றொரு சொத்து குறித்து பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்துள்ளார்களா என்றால் சரிதான். அவ்வழக்குச் சொத்தும் இவ்வழக்குச் சொத்தும் வேறு வேறு காலையில் அமைந்துள்ளன என்றால் சரிதான். அ.வ.எண்.470/2006 என்ற வழக்கு என் தந்தை கிருஷ்ணசாமியின் வாரிசு சான்று கோரிய வழக்கு என்றால் சரிதான். அ.வ.எண்.470/2006 வழக்கில் இவ்வழக்கில் 2 முதல் 5 பிரதிவாதிகள்தான் என் தந்தை கிருஷ்ணசாமியின் வாரிசு என விளம்புகை செய்யப்பட்டது என்றால் சரிதான்.

3) வழக்குச் சொத்தில் நான் தனிப்பட்ட வகையில் ஏதேனும் மேம்பாடு செய்துள்ளேனா என்றால் பராமரித்து மட்டும் வருகிறேன். வழக்குச் சொத்தை 2 ம் பிரதிவாதியும் அவரது கணவர் கிருஷ்ணசாமியும் சேர்ந்து வழக்குச் சொத்தை விலைக்கு வாங்கி அதனை மேம்படுத்த தங்கள் உழைப்பையும் செலவையும் இட்டுள்ளார்கள் என்றால் சரிதான். வழக்குச் சொத்தில் 2 முதல்

7 பிரதிவாதிகளுக்குதான் பாத்தியம் உள்ளது என்றும் வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியம் ஏதும் இல்லை என்றும் சொன்னால் சரிதான். என் தந்தை இருந்தகாலத்திலும் அவருக்குப் பின்னிட்ட காலத்திலும் நான் அவருடன் இருந்து வழக்குச் சொத்தை நிர்வகித்து வந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல,

**6,7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

**(2 ம் பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை அவ்வாறே ஏற்றுக் கொள்ளப்படுகிறது)**

**ஒப்பம் /- ( மு.ச.ஸ்ரீநாத்)**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி